# முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு

மேல்நிலை முதலாம் ஆண்டு

வணிகவியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண் : 50

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $10 \times 1 = 10$

1. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

   அ) 2004 ஆ) 2007 இ) 2006 ஈ) 2008

2. முத்ரா வங்கி எவ்வகை நிறுவனங்களுக்கு கடன் வழங்குகிறது?

   அ) குறு நிறுவனங்கள் ஆ) சிறு நிறுவனங்கள்
   இ) நடுத்தர நிறுவனங்கள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

3. வெளிநாட்டில் இருந்து சரக்குகள் வாங்கப்படுவது ------------ என அழைக்கப்படும்

   அ) இறக்குமதி ஆ) ஏற்றுமதி இ) மறு ஏற்றுமதி ஈ) மீண்டும் ஏற்றுமதி

4. உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர்

   அ) உற்பத்தியாளர் ஆ) மொத்த வியாபாரி
   இ) சில்லறை வியாபாரி ஈ) நுகர்வோர்கள்

5. நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுச் சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ------------ என்பர்.

   அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள்
   இ) தெருக்கடை வியாபாரிகள் ஈ) சுற்றாடும் வியாபாரிகள்

6. நாடுகளுக்கிடையே சரக்கு. சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில் நுட்பம், மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம்பெயருவது

   அ) பன்னாட்டு வியபாரம் ஆ) பன்னாட்டு வணிகம்
   இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்

7. ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளை பின்பற்ற நியமிக்கப்படும் முகவர் -----------

   அ) அகற்றீட்டு முகவர் ஆ) அனுப்புகை முகவர்
   இ) கழிவு முகவர் ஈ) தன் பொறுப்பு முகவர்

8. உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்

   அ) 1 - 1 - 1996 ஆ) 1 - 1 - 1997 இ) 1 - 1 - 1995 ஈ) 1 - 1 - 1994

9. ஒரு நாட்டில் குடியிருப்போருக்கும் மற்றொரு நாட்டில் குடியிருப்போருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட அறிக்கை

   அ) செலுத்தல் சமநிலை ஆ) வாணிப சமநிலை
   இ) பெறுதல் செலுத்தல் அறிக்கை ஈ) கணக்கியல் அறிக்கை

10. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை

    அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு
    இ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி ஈ) ஒப்பந்தம்

B.BALAJI, GHSS, PARANTHER, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

## பகுதி --- II

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $5 \times 2 = 10$

11. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக
12. மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?
13. தரகர் என்பவர் யார்?
14. சிறப்புப் பண்டகச்சாலைகள் என்றால் என்ன?
15. சரக்காணை என்றால் என்ன?
16. உலக வங்கி என்பதன் பொருள் யாது?
17. திரு. இரமேஷ் அவர்கள் குறிப்பட்ட பொருளின், பல்வேறு வகைகளை விற்பனை செய்பவர். அவரிடமிருந்து திரு. அரவிந்தன் அவர்கள் குறைந்த அளவில் பொருட்களை வாங்கிச் செல்கிறார். இதில், அ) திரு. இரமேஷ் என்பவர் எத்தகைய வியாபாரி?
    ஆ) திரு. அரவிந்தன் என்பவர் எவ்விருவர்களை இணைக்கும் இணைப்புச் சங்கிலியாக விளங்குகிறார்?

## பகுதி - III

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $5 \times 3 = 15$

18. சுய உதவி குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விளக்குக
19. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுது
20. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக. ( ஏதேனும் 3 )
21. கப்பல் தலைவர் ரசீது என்றால் என்ன?
22. உடன்படிக்கை என்றால் என்ன?
23. மடங்கு கடைகளின் குறைபாடுகள் யாவை? விளக்குக. ( ஏதேனும் 3 )
24. சூரத் நகரின் வைர வியாபாரிகள் தெற்கு ஆப்ரிக்காவில் இருந்து துண்டிக்கப்படாத வைரங்களை வாங்கி, அவற்றை துண்டாக்கி, பட்டைதீட்டி, ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள பன்னாட்டு வைரச் சந்தைக்கு அனுப்பி வைக்கின்றனர். இது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு? மேற்கண்ட வியாபாரத்தில் சிறப்பாக செயல்படும் மையங்களை ( நாடுகளை ) குறிபிடவும்

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** $3 \times 5 = 15$

25. அ) சுய உதவி குழுக்களின் நோக்கங்களை விவரி. ( ஏதேனும் 5 )

    ( அல்லது )

    ஆ) உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?

26. அ) மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக

    ( அல்லது )

    ஆ) உள் நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ளவேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் 5 )

27. அ) துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக

    ( அல்லது )

    ஆ) பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் யாவை? ( ஏதேனும் 5 )

B.BALAJI, GHSS, PARANTHER, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593